சோயாஸ்'' என்று சோயா எண்ணெய் தயாரிக்கும் தொழிற் சாலையை பொள்ளாச்சியில் அமைத்திருக்கிறார்கள். அந்த சக்தி நிறுவனத்தாலே தயாரிக்கப்படும் சோயா எண்ணெய் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது என்று மக்கள் மத்தியில் கருத்து இருந்து கொண்டிருக்கிறது. இந்தத் தொழிற் சாலையிலே தயாரிக்கப்படுகின்ற சோயா எண்ணெயை வெளி மாநிலங்களுக்கு இன்றைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசினுடைய நிதியைப் பெற்று தமிழ்நாட்டில் நடக்கின்ற தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் எண்ணெயை தமிழக அரசே பெற்று, தமிழக மக்களுக்கு விநியோகிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே அந்த ஆலை துவக்கப்பட்டு, அங்கே உற்பத்தி செய்யப்படுகிறது. முதலில் கோவை மாவட்டம், பெரியார் மாவட்டத்தில் இருக்கிற வர்கள் அதை வாங்கிச் சாப்பிட்டு, உண்மையிலேயே அது நன்றாக இருக்கிறதென்று சொன்னால் அதைத் தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 586, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

586—

தொடக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களை அரசு ஊழியராக்குதல்.

*5267.—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா? :

தொடக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களை அரசு ஊழியர் களாக ஆக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்படி அந்தந்த சங்கங்களின் கட்டுப்பாட்டில் பணி புரிகின்றனர்; எனவே, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க இயலாது.

திரு. ப. கலியபெருமாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பல்வேறு தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் பணி நீக்கம்செய்யப்படுவோமோ

என்ற அச்ச உணர்வோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஊழியர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்காகப் பணி புரிகின்ற எந்த ஊழியருக்கும் அப்படிப்பட்ட அச்ச உணர்வு தேவையில்லை ஒரு வகையிலே அப்படிப்பட்ட அச்ச உணர்வு இருக்கும் இடங்களில் தான் ஊழியர்கள் ஒழுங்காகப் பணி புரிகிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அதிகமாக லாபம் ஈட்டுகிற கூட்டுறவுச் சங்கங்களில் பணி புரியும் ஊழியர்கள் அரசாங்க ஊழியர்களைவிட அதிகமாகச் சம்பளம் வாங்குகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட பிரச்சினை எழவில்லை. அவர்கள் அச்சப்பட வேண்டிய தேவையில்லை. ஒழுங்காக வேலை செய்வார்களானால்.

முற்பகல் 10-25

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் புரட்சித்தலைவர் காலத்தில் சத்துணவு மையங்களில் பணியாற்றியவர்கள் நம்பிக்கையோடு பணியாற்றினார்கள். இடையிலே தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அவர்களை நீக்கிவிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களை அங்கே பணியில் அமர்த்தியுள்ளார்கள். அவர்கள் அனைவரும் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சிப் பிரச்சாரம் செய்துகொண்டு அங்கே சரியான முறையில் பணியாற்றுவதில்லை. அவர்களை நீக்கிவிட்டு புரட்சித்தலைவர் காலத்தில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை தந்து மீண்டும் அவர்களை அங்கே பணியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை வேலைக்கு நியமிக்கும்போது எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமாகவோ அல்லது நேர்முகத் தேர்வு நடத்தியோ ஒழுங்காக அவர்களை வேலைக்கு எடுத்திருந்து, அவர்களை வேறு அரசியல் காரணங்களுக்காக நீக்கப்பட்டிருந்தால், உடனடியாக மறுபடியும் அவர்களை வேலைக்கு அனுப்புவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும். அப்படியில்லாமல் தமக்கு வேண்டியவர்களை irregular appointment என்ற அளவுக்கு நியமிக்கப்பட்டிருந்தால் அப்படிப்பட்டவர்களைப் பற்றி வேறுவிதமான பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தொகுதியிலேயே ஒரு தொடக்கக் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் உர மூட்டையைக் கடத்துகிற போது பொதுமக்கள் தடுக்க, டிராக்டரைக்கொண்டு அவர்களைக் கொலை செய்தார் என்று இந்த அவையில் நீங்கள் பிரச்சினை எழுப்பியபோது அன்றைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் சங்கச் செயலாளர் ஆகவும் ஊழியராகவும் இருப்பவர்களை ஒரு சங்கத்திலிருந்து மற்றொரு சங்கத்திற்கு மாறுதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தரவாதத்தை இந்த அவையிலேயே தந்தார்கள். அந்த உத்தரவாதம் நிறைவேற்றப் படவேண்டுமானால் தொடக்க கூட்டுறவு வங்கி ஊழியர்கள் என்ற நிலையிலிருந்து மாற்றி மத்திய வங்கி ஊழியர்கள் அல்லது அரசு ஊழியர்கள் என்று மாற்றினால்தான் தவறு செய்பவர்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்ற இயலும். ஆகவே அந்த வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கருத்து நம்முடைய அவையில் சொல்லப்பட்டு இப்போது இந்தத் துறையில் பரிசீலனையில் இருக்கிறது. 'காமன் கேடர்' ஏற்படுத்துவது பற்றி அதற்காக ஒரு குழுவை நியமித்திருக்கிறோம். அந்தக் குழு, அவர்களின் பணி நிலைகள், மற்றும் சம்பள விகிதங்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டு செயல்படும். அந்தக் குழுவின் பரிந்துரைக்குப் பின்னால் அதனுடைய விபரங்கள் இந்த அவைக்குத் தெரிவிக்கப் படும், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 587, திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

587—

பச்சிளம் குழந்தைகளுக்கு சத்துணவு.

*96—திரு. டி. எம். ரங்கராஜன் :

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முதல் அமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பச்சிளம் குழந்தைகளுக்கும் (Children of Tender Age) சத்துணவு வழங்கிட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

TRUTH ALONE TRIUMPHS